RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s-22275

# குமாரகேசனால் படைக்கப்பட்ட கோட்டை பொம்மக்கா தெய்வ வழிபாட்டில் நேர்த்திக்கடன்

**இரா. கலைச்செல்வி [அ, *], வெ. பானுமதி [அ]**

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி, சேலம்-636016, தமிழ்நாடு, இந்தியா

# Deity Worship in Kottai Bommakka by Kumarakesan

**R. Kalaiselvi [a, *], V. Banumathi [a]**

[a] Department of Tamil, Sri Sarada College for Women, Salem-636016, Tamil Nadu, India

* Corresponding Author: kalaitamil606@gmail.com

Received: 11-10-2022
Revised: 02-11-2022
Accepted: 09-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Community refers to a specific group of people and a larger group of people living in a homogeneous geographical area. We can call the Tamil speaking people as Tamil society. Through Sangam literary songs, we can know that worship has been practiced in Tamil society since ancient times. A collection of short stories called Kottai Bommakka written by the novelist Kumarakesan is about the worship of small idols and especially about the sacrifice and offerings to God. This article particularly deals about the offerings given to God.

**Keywords:** God, Community, Epic, Kumarakesan

## முன்னுரை

சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவையும் ஒரே மாதிரியான புவியியல் நிலப்பகுதியில் வாழ்கின்ற ஒரு பெரிய மக்கள் குழுவையும் குறிக்கும் தமிழ்மொழி பேசும், மக்கள் வாழும் நிலப்பரப்பை தமிழ் சமூகம் எனலாம். தமிழ் சமூகத்தில் பண்டைய காலம் தொட்டே வழிபாடு நடைமுறையில் இருந்ததை சங்கப் பாடல்களின் வழியாக நாம் அறிந்து கொள்ளலாம்.

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்த லெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

என்பது தொல்காப்பியம் (Ilampooranar, 2018).

காடும் காடு சார்ந்த நிலமுமாகிய முல்லை நிலத்திற்குத் திருமாலைத் தெய்வமாகவும், மலையும் மலை சார்ந்த நிலமுமாகிய குறிஞ்சி நிலத்திற்கு முருகனைத் தெய்வமாகவும், வயலும் வயல்சார்ந்த நிலமுமாகிய மருத நிலத்திற்கு இந்திரனைத் தெய்வமாகவும் மணலும் மணல் சார்ந்த நெய்தல் நிலத்திற்கு வருணனைத் தெய்வமாகவும், பழந்தமிழ் மக்கள் வகுத்துக் கொண்டார்கள் என்று

தொல்காப்பியர் சுட்டுகிறார். பழந்தமிழ் மக்கள் நிலத்தையும், நிலத்திற்குரிய தெய்வத்தையும் வகுத்துக் கொண்டதோடு அல்லாமல் வழிபாடும் செய்தனர்.

## கோட்டை பொம்மக்கா:

"கோட்டை பொம்மக்கா" என்னும் இந்நூலில் ஈர்ப்பு, கண்டுகொண்டால், பூர்வீக வீடு, தடங்கல், பூமி, விறகு வெட்டிகள், கொழுஞ்சி, சின்னாண்டி, கிரகம், ஜீவிதராகம், ஒற்றுமை, கோட்டை பொம்மக்கா ஆகிய பன்னிரண்டு சிறுகதைகள் அடங்கியுள்ளன. இச்சிறுகதையில் ஈர்ப்பு, விறகு வெட்டிகள், சின்னாண்டி என்ற மூன்று சிறுகதைகள் மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

கோட்டை பொம்மக்கா என்ற நூலின் ஆசிரியர் நாவல் குமாரகேசன். முருகேசன் என்ற இயற்பெயரைக் கொண்ட நாவல் குமாரகேசன் தமிழ்நாட்டின் திண்டுக்கல் மாவட்டத்தில் நாவலூற்று என்ற கிராமத்தில் பிறந்தவர் தமது சகோதரருடன் சேர்ந்து சுயதொழில் நிறுவனம் ஒன்றை நடத்திவரும் இவர், பல்வேறு சிற்றிதழ்களிலும் கதை, கவிதைகள் எழுதி வருகிறார். இவரது படைப்புகள் பெரும்பான்மையையும் விளிம்பு நிலை மக்கள் குறித்தும், கிராம வாழ்வு குறித்தும், தாம் சார்ந்த பகுதியின் அடையாளத்தோடும் எளிமையாக, இயல்பாக நாட்டுப்புற கதை சொல்லல் முறையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## வழிபாடு என்பது

சங்க கால மக்கள் அச்சம் காரணமாக இயற்கையை வழிபடத் தொடங்கினர். பின் போர்க்களத்தில் இறந்த வீரர்களுக்கு நடுகற்கள் எழுப்பி எழுப்பி அந்நடுகற்களை வழிபட்டனர். அதன்பின் கால மாற்றத்தால் முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை என தெய்வங்களை வழிபடும் வழிபாடு வளர்ச்சிப் பெறத் துவங்கியது. அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகிய நான்கு உறுதிப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டே இலக்கியங்கள் இயற்றப்படுகின்றது. இந்த உறுதிப் பொருட்கள் நான்கினுள்ளும் அறமே தலையாயதாகப் போற்றப்படுகிறது.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற" (Puliyur Kesigan, 2009)

ஒருவன் தன் மனதில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அதுவே அறம் எனப்படும். மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை என்றும்

"அஞ்சுவது அஞ்சாமை பேதமை, அஞ்சுவது

அஞ்சல் அறிவார் தொழில்" (Puliyur Kesigan, 2009)

பழி, பாவம், கேடு முதலானவை நேருவதற்குரிய செயல்களைச் செய்வதற்கு அஞ்சாதிருப்பது அறியாமையாகும். அத்தகைய காரியங்களைச் செய்வதற்கு அஞ்சுவதே அறிவுடையார் செயலாகும் என்றும் வள்ளுவ பெருந்தகையார் கூறியுள்ளார். மக்கள் மனதில் மாசுடனும், அறவழியிலிருந்து தவறுகின்ற பொழுதும் இறைவன் தண்டனை வழங்குவான் என்று கூறி ஒழுக்க சிலர்கள் மக்களை நல்வழிப்படுத்தினர். இன்றும் குழந்தைகள் தவறு செய்கின்ற பொழுது, சாமி கண்ணைக் குத்தும் என்று தாய்மார்கள் இறைவனிடம் அச்சம் ஏற்படுமாறு செய்கின்றனர். தாய் கூறியதைக் கேட்ட குழந்தை தவறு செய்ய அஞ்சுகிறது. தாய் கூறிய சொற்கள் பசுமரத்தாணி போல அவர்கள் மனதில் பதிந்து விட்டதால் பெரியவர்களாக வளர்ந்த பின்னும் தவறு செய்ய, பிறருக்கு கேடு செய்ய மனிதன் அஞ்சுகிறான்.

## இன்றைய வழிபாடு:

பெரும்பான்மையான மக்கள் மன அமைதி பெறுவதற்காகவும், வாழ்க்கையில் தங்களுக்கு வேண்டியதை கேட்டு பெறுவதற்காகவும், தாங்கள் செய்த பாவங்களினால் ஏற்படும் தீமைகளிலிருந்து விடுபடுவதற்காகவும் நற்கதியை அடைவதற்காகவும் இறைவனை வழிபாடு செய்கின்றனர்.

### வழிபாட்டு முறைகள்

தெய்வங்களுக்கு மக்கள் செய்யும் சடங்குகளும், வழிபாட்டு நெறிகளும் வழிபாட்டு முறைகள் எனப்படும். வழிபாட்டு முறைகள் என்பவை தெய்வங்களுக்குத் தெய்வம் மாறுபடும். ஒவ்வொரு தெய்வத்திற்கும் அவற்றிக்கென தனியான வழிபாட்டு முறைகள் இருக்கும். பொதுவாக தெய்வங்களை திருமுழுக்கு செய்து, ஆடை அணிகலன்கள் அணிவித்து மலர்கள் இட்டு அலங்கரிப்பர். படையல் வைத்து பூசை செய்வர். பூசை செய்கின்ற பொழுது தெய்வங்களின் சிறப்புகளைப் பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் மலர் தூவியும் வழிபடுவர். நேர்த்திக்கடன் செலுத்துதல் வழிபாட்டில் இன்றியமையாததாக கருதப்படுகிறது.

#### நேர்த்திக்கடன்

நேர்த்திக்கடன் என்பது தெய்வத்திற்கு வழங்குவதாக நேர்ந்த கடனாகும். தனி ஒருவரின் நலன் கருதியும், பொதுநலன் கருத்தியும் நேர்த்திக்கடன் தரப்படுகின்றன. நேர்த்திக்கடனை பலியிடல் என நற்றிணையும், பராய்க்கடன் என ஐங்குறுநூறும் கூறுகின்றன.

#### பராய்க்கடன்

தான் வேண்டியது நிறைவேறுமானால் இன்னது படைப்பேன் என்று கடவுளரையோ, பிறவற்றையோ வேண்டிக் கோடல் பராய்க்கடன் உரைத்தல் என்பர்.

"மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை

அன்புடை மரபினின் கிளையோ டாரப்

பச்சூன் பெய்த பைந்நிண வல்சி

பொலம்புனை கலத்தில் தருகுவென் மாதோ

வெஞ்சின விறல்வேல் காளையொடு

அஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமே"

என்னும் பாடல் ஐங்குறுநூற்றில் மறுதரவுப்பத்து என்னும் தலைப்பில் அமைந்துள்ளது (Parimanam & Balasubramaniyam, 2004). காக்கையே, உடன் போகிய என் மகளும் அவள் கணவனும், இங்கே எம் இல்லத்திற்கு வருமாறு நீயும் கரைவாயாக, அவர்கள் அப்படியே வந்தால், நினக்கும் நின் சுற்றத்துக்கும் யான் பச்சூன் பெய்த பசுமையான கறியுணவைப் பாலியாகத் தருவேன் என்று, கைதொழுது வேண்டுவதாக அமைந்துள்ளது. இப்பாடலின் மூலம் சங்ககாலத்தில் நேர்த்திக்கடன் வழிபாடு நடைபெற்றதை அறிந்து கொள்ளலாம். மேலும் நற்றிணையில் உள்ள

"பெருந்தோள் நெகிழ அவ்வரி வாடச்

------- -------- ---------

------- -------- ---------

------- -------- ---------

அணங்கல் ஓம்புமதி வாழிய நீயெனக்

கணங்கெழு கடவுட்கு உயிர்பலி தூஉய்ப" (Swaminatha Iyer, 1986)

இப்பாடலில் கடவுளுக்கு உயர்ந்த பலியையிட்டுச் சாந்தி செய்து வழிபடுவோர் என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள். இவ்விரு பாடல்களும் தனி ஒருவரின் நலன் கருதி நேர்த்திக்கடன் செய்யப்படுவதாக அமைந்துள்ளது. மக்கள், தங்களுக்கு கடுமையான துன்பம் வரும் பொழுதும், உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற பொழுதும் தெய்வத்திடம் நேர்த்திக்கடன் செலுத்துவதாக வேண்டிக்

கொள்கிறார்கள். இக்காலங்களில் நேர்த்திக்கடனை மூன்று வகையாக பிரிக்கலாம். அவை முறையே i) உடலை வருத்தும் நேர்த்திக்கடன் ii) பொருளாக வழங்கப்படும் நேர்த்திக்கடன் iii) உயிர் பலியாக வழங்கப்படும் நேர்த்திக்கடன் என்பவையாகும்.

**நேர்த்திக்கடன்**

| உடலை வருத்தும் நேர்த்திக்கடன் | பொருளாக வழங்கப்படும் நேர்த்திக்கடன் | உயிர் பலியாக வழங்கப்படும் நேர்த்திக்கடன் |
|---|---|---|
| அலகு குத்துதல், பூக்குழி இறங்குதல், பூவோடு ஏந்துதல், உருள் தண்டம், மொட்டை அடித்தல், மடிப்பிச்சை எடுத்தல், தீர்த்தகுடம் எடுத்தல். | உண்டியலில் காணிக்கை செலுத்துதல், எடைக்கு எடை பொருள் வழங்குதல், (பணம், தங்கம் கற்கண்டு) மணி, வேல், சூலம், அன்னதானம் செய்தல், தேங்காய் உடைத்தல். | ஆடு, கோழி, பன்றி, எருமை |

## கோட்டை பொம்மக்காவில் நேர்த்திக்கடன்

"கோட்டை பொம்மக்கா" என்னும் சிறுகதை தொகுப்பில் பன்னிரண்டு சிறுகதைகள் உள்ளன (Kumarakesan, 2012). அவற்றில் ஈர்ப்பு என்ற சிறுகதை முதலாவதாக அமைந்துள்ளது. அக்கதையில் வரும் ஒரு தாய் தன் மகனிடம்

"டேய் வேலுமணி உனக்கு வெவரந் தெரியாத வயசுல ஒரு

ராத்திரியில இதே சித்திர மாசத்துல தான், காத்தும் மழையும்

பேஞ்சுக்கிட்டிருக்கிறப்ப ஜன்னி வந்துருச்சு .....என்ன செய்ய….

காளியாத்தா புள்ளையக் காப்பாத்து பொழச்சு வந்தா பூவோடு ஏந்த

வைக்கறேன்னு வேண்டிக்கிட்டனப்பா….

சாமி குத்தம் வெச்சுக்கப்படாதுனு கேட்டிருக்கிறயா…

குளிச்சிட்டு ஈரத்துணையோட பொறப்படடா…"

என்று கூறுவதிலிருந்து நேர்த்திக்கடனின் இன்றியாமையாமையை அறிந்து கொள்ளலாம். துன்பத்திலிருந்து மீண்ட பிறகு, நேர்த்திக்கடனை செலுத்தவில்லை எனில் மீண்டும் தெய்வத்தின் தண்டனைக்கு ஆளாக நேரிடும் என்ற அச்சமும் மக்களிடையே இருந்தது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ளலாம். மேலும், அவனுடைய தாய்

"பூசாரி விபூதியைப் போட்டதுமே கெடாய்

சம்மதங் குடுத்து துலுக்கிடுச்சு""

என்று கூறுவதன் மூலம் ஜன்னியிலிருந்து காப்பாற்றியதற்கு நேர்த்திக்கடனாக பூவோடு ஏந்தியதோடு நில்லாமல், ஆட்டையும் உயிர்பலியாக கொடுத்து தெய்வத்தை மகிழ்விக்கிறார்கள் என்ற கருத்தும் புலனாகிறது (Kumarakesan, 2012). சிறு தெய்வ வழிபாட்டில் பலியிடலும், மாமிச படையலும் முக்கிய இடம் பெறுகின்றன என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

## சின்னாண்டி

ஆலமரத்து பட்டியில ஊருக்கு வடமேற்குல ஒரு ஆலமரம் அத ஒட்டி காளியாத்தா கோயில். ஏழு வருஷத்துக்கு ஒரு தடவை திருநாள் வரும். ஏகபோகமா எருமக்கெடா வெட்டுவாங்க.

என்ற கூற்றிலிருந்து, பண்டிகை திருநாட்களின் பொழுது, தங்களைக் காப்பாற்றிய தெய்வத்தை மகிழ்விக்க மக்கள் எருமைக்கிடா வெட்டி மகிழ்ச்சி அடைகிறார்கள் என்பது புலனாகிறது. இக்கதையிலும் உயிர்பலியிடல் போற்றப்படுகிறது (Kumarakesan, 2012).

சின்னாண்டியும் சண்முகமும் நெருங்கிய நண்பர்கள். சின்னாண்டி காளியம்மனுக்கு பூசை செய்யும் பூசாரி. சண்முகம் சட்டிபானை செய்யும் தொழிலாளி. தங்கத்தாய் என்ற பெண்ணை திருமணம் செய்து கொள்கிறான். தங்கத்தாய் சின்னாண்டியை தன்னுடைய அண்ணனாக கருதி அன்பு செலுத்துகிறாள். ஒரு முறை சின்னாண்டிக்கு காய்ச்சல் வந்தது. வந்த காய்ச்சலில் கண்பார்வை மங்க தொடங்கியது. ஆறு மாதத்திற்கு பிறகு சுத்தமாக கண்ணே தெரியவில்லை. சின்னாண்டியை அவ்வூரில் வசிக்கும் ஆண்டவன் என்பவர் மதுரை கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறார்.

> "சின்னாண்டி கண்ணோட வந்து சேர்ந்திட்டா கருமாரியாத்தாளுக்கு சாவடிக்கிறதா வேண்டி கோழி ஏவாரிகிட்ட ஒரு சாவக்குஞ்சும் வாங்கிவிடறா"

என்ற வரிகளின் மூலம் தங்கத்தாய் கருமாரியம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துவதாக வேண்டியதோடு மட்டுமல்லாமல் செயலாற்றும் விதமாக சேவல் குஞ்சையும் வாங்கி வளர்க்கின்றாள் என்பதன் மூலம், இந்நிகழ்வினால் கருமாரியம்மன் மகிழ்ந்து சின்னாண்டியை விரைவாக குணப்படுத்தி விடுவாள் என்ற நம்பிக்கை மேலும் வலுவடைகிறது (Kumarakesan, 2012).

## விறகு வெட்டிகள்

நாட்ராயனும் நாச்சிமுத்துவும் ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்கள். விறகு பொறுக்குவதற்காக இருவரும் காட்டுப்பக்கம் செல்கின்றனர். அங்கே ஒரு ஓடையைக் கண்டனர். பனங்கொட்டை ஒன்று முளைத்திருந்தது. அந்தப் பனங்கொட்டையை உடைத்தால் சீம்பு வரும். அதை தின்பதற்காக ஆசைப்பட்டு அங்கிருந்த ஒரு பெரிய கல்லை நாச்சிமுத்து எடுக்கின்றான். அதன் அடியிலிருந்த கழுதை விரியான் பாம்பு அவனைக் கடித்து விடுகின்றது. நாட்ராயன் தன்னுடைய அரைஞாண் கயிற்றை அவிழ்த்து அவனோட தொடையில் இறுக்கமாக கட்டி விடுகிறான்.

> "டேய் பயமாயிருக்கா…. பயப்படாதடா கட்டுப் போட்டுட்டம்ல… இனி ஒண்ணும் பண்ணாது. ஆலமரத்தடி கருப்பண்ணசாமிக்கு எறிதேங்கா ஒடைக்கறம்னு வேண்டியிருக்கேன் டா… மனச தளர விடாத"

என்று நாட்ராயன் நாச்சிமுத்துவிடும் கூறுகிறான். இக்கூற்றிலிருந்து பெரியவர்கள், தங்களுக்கு துன்பம் ஏற்பட்டபொழுது தெய்வத்திடம் வேண்டிக் கொண்டதைப் பார்த்த சிறுவர்கள், தங்களுக்கு துன்பம் ஏற்பட்டபொழுதும் தெய்வத்திடம் நேர்த்திக்கடன் செலுத்துவதாக வேண்டிக்கொள்கிறார்கள். இவ்வாறாக, மக்களுக்கு ஏற்படும் துன்பத்தைத் துடைப்பதற்காக, மக்கள் தெய்வத்திற்கு நேர்த்திக்கடன் செலுத்துகிறார்கள். நேர்த்திக்கடன் செலுத்துவதன் மூலம் தெய்வம் மகிழ்ச்சியடைந்து, தங்களுக்கு நன்மையைச் செய்யும் என்றும் நம்புகிறார்கள் (Kumarakesan, 2012).

## முடிவுரை

காலங்கள் உருண்டோடலாம். கால மாற்றத்தினால், பல்வேறு இடங்களில், பல்வேறு பொருட்களில், பல்வேறு நிகழ்வுகளில் மாற்றங்கள் ஏற்படலாம். மக்கள் தங்களிடமுள்ள அறிவின் காரணமாக பல்வேறு புதிய பொருட்களை, படைப்புகளை உருவாக்கலாம். அறிவியல் தொழில்நுட்பத்தின் மூலம் மக்கள் வேகமாக முன்னேறி செல்லலாம். எத்தகைய முன்னேற்றம் அடைந்தாலும், எத்தகைய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்தாலும், துன்பம் என்று ஒன்று வந்துவிட்டால் தெய்வத்தின் காலடியை நோக்கி செல்ல வேண்டும் என்பதை மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள். தெய்வத்தை வணங்கியும், வழிபாடு செய்தும், தெய்வத்திற்கு மனமகிழ்ச்சியைத் தரும் நேர்த்திக்கடனை

செலுத்தியுமே மக்கள் தங்கள் வாழ்நாளைக் கழிப்பார்கள். இக்கட்டுரையின் மூலம் நேர்த்திக்கடனே வழிபாட்டு முறைகளில் சிறந்தது என்று கூற்றுக்கு சரியான விடை காணமுடிகின்றது.

## References

Ilampooranar, (2018) Tholkappiyam Poorulathikaram, Saratha Publication, Chennai, India

Kumarakesan, (2012) Kottai Bommakka, Annai Rajeshwari Pathippagam, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2004) Ainkurunuru, New Century Book House Pvt Ltd, Chennai, India

Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India.

Swaminatha Iyer, U.V. (1986) Nattrinai Moolamum Uraiyum, U.Ve.Sa. Library, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License